# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110257

1. District : Tiruvannamalai
மாவட்டம்
PS: Vigilance & Anti Corruption
காவல்நிலையம்
Year: 
ஆண்டு
FIR No.: 09/2020
மு.த.அ. எண்
Date: 13.11.2020
நாள்

2. (i) Act சட்டம்: CrPC
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by PC Amendment Act 2018
Sections பிரிவுகள்: Section 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 r/w 102 CrPC
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

Tiruvannamalai Detachment

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to : 12.11.2020
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to : Before 1600 Hrs
நேரம் வரை

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 13.11.2020
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 1600 Hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 4 Kms South Direction
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : O/o Deputy Director of Industrial Safety and Health, No. 8, 9th Street Gandhi Nagar Tiruvannamalai.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : Tr. T. Krishnamurthy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/Husband's Name : Tr. Thulasi.
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1971
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection cell officer, Vellore, Thirupathur, Ranipet and Tiruvannamalai district.
தொழில்
(g) Address : District Collectorate campus Vellore District.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tmt. M. Najma age 29, W/o Mahaboob Basha Deputy Director, Industrial Safety and Health, Tiruvannamalai
Residential Address: No. 115, Mandi Street Arni, Tiruvannamalai Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

In A separate Enclosed Sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
13/11/2020
(R.ARULPRASAD)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.11.2020 at 1700 hrs

Name: பெயர் …… Inspector of Police
Rank: நிலை …… Vigilance and Anti Corruption No. எண் ……
Tiruvannamalai Detachment

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து அனுப்பப்படுகிறது:

இன்று 13.11.2020-ஆம் தேதி பகல் 1600 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:-அனுப்புநர் திரு.து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.ந.க.எண் **S1/ 10552/2020,** நாள்: 13.11.2020 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – திருவண்ணாமலை மாவட்டம், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் 12.11.2020 அன்று இருதுறை கூட்டு திடீர் சோதனை மேற்கொண்டது -கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக.பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள் 12.11.2020-ஆம் தேதி திருவண்ணாமலை மாவட்டம் துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் மாலை 1600 மணிமுதல் 2300 மணிவரை இருதுறை கூட்டு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது திருமதி.ம.நஜ்மா, துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் மற்றும் இதர பணியாற்றும் பணியில் இருந்தனர். அப்போது அலுவலகத்தின் உள்ளே நுழைந்து சோதனை செய்ய பதிவறையில் கேட்பாரற்ற நிலையில் ரூபாய் 9,000/- இருந்தது அலுவலகத்தில் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோரவில்லை. எனவே அப்பணம் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கிருந்த ஹட்சன் அக்ரோ புரோடக்ட்ஸ் என்ற தனியார் நிறுவனத்தின் முதுநிலை அலுவலர் திரு.மு.கார்த்திகேயன், என்பவரை சோதனை செய்ய அவர் தன்னிடம் மேற்படி நிறுவனம் பெயர் அச்சிடப்பட்ட வெண்ணிற காகிதத்தில் ஸ்டேபலர் போட்டு முடப்பட்டிருந்த கவர் ஒன்றை வைத்திருந்தார், அதை சோதனை செய்து பார்க்க அதில் ரூபாய் 25,000/- இருந்தது, இதைப்பற்றி கேட்க அவர் தக்க முகாந்திரம் எதுவும் கூறாததால் மேற்கண்ட தொகை விசாரணை நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும் துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், அவர்கள் ஆஜர் செய்த அலுவலகத்தின் வருகை பதிவேடு, மேலும் திருவண்ணாமலை

மாவட்டம் வந்தவாசி மற்றும் போளூரில் உள்ள ஹட்சன் அக்ரோ புராடக்ட்ஸ் கம்பெனியின் அழுத்தக்கலன் கட்டண நிலுவை கோப்புகள் TM 325 & TM 301 முறையே 1முதல் 160 பக்கங்களாகவும், 1 முதல் 162 பக்கங்களாகவும் இருந்தது ஆகியவற்றை கைப்பற்றி இத்துடன் ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக திருவண்ணாமலை நகரம், எண் 8, காந்திநகர், 9 வது தெரு, திருவண்ணாமலையில் அமைந்துள்ள துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் 12.11.2020 மாலை 1600 மணிமுதல் இரவு 2300 மணிவரை இருதுறை கூட்டு திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறையில் முழுவிபரம் உள்ளது அதை இத்துடன் இணைத்து இன்று 13.11.2020-ஆம் தேதி 1600 மணிக்கு உரிய நடவடிக்கைக்காக புகார் மனு அளிக்கிறேன். மேலும் துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட பணம் மொத்ததொகை ருபாய் 34,000/- கையூட்டு எனப்படும் இலஞ்சபணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் துணை இயக்குனர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் திருமதி.ம.நஜ்மா அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: வாக்குமூலங்கள்-2 (Sd XXXXX) (து.கிருஷ்ணமூர்த்தி), ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,வேலூர். இணைத்தனுப்பிய திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்து செயல்முறை பின்வருமாறு உள்ளது வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, திருவண்ணாமலை பிரிவு அலுவலர்களால், திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை நகரம், எண் 8, காந்திநகர், 9 வது தெரு, திருவண்ணாமலை. அமைந்துள்ள துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் இன்று 12.11.2020 மாலை 1600 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை:- முன்னிலை 1. திரு.து.கிருஷ்ணமூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர்,வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,வேலூர். 2. ம.நஜ்மா,துணை இயக்குனர்,தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,திருவண்ணாமலைதிருவண்ணாமலை மாவட்டம். 3.திரு.இரா.அருள்பிரசாத்,

காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம். திருவண்ணாமலை நகரம், எண் 8, காந்திநகர், 9 வது தெரு, திருவண்ணாமலை. அமைந்துள்ள துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் தீபாவளி பண்டிகை முன்னிட்டு தொழில் துறை கம்பெனிகளின் முகவர்கள் மூலம் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இன்று 12.11.2020 மாலை 1600 மணிக்கு வேலூர்,திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.து.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவண்ணாமலை அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. 2. இந்த அலுவலகமானது திருவண்ணாமலை நகரம், எண் 8, காந்திநகர் 9 வது தெருவில் தெற்கு திசை நோக்கி அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் கிழக்கு மேற்காக இருபக்கமும் சுற்று சுவர் கட்டப்பட்டு, இரு கிரில் கதவுகள் போடப்பட்டுள்ளது. இந்த அலுவலக கட்டடத்தின் முன் பகுதியில் துணை இயக்குனர் அலுவலகம், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என எழுதப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் முன் வராண்டா சுமார் 8X8 உள்ளது இதன் தெற்கு திசையில் படிக்கட்டுகள் மேல்தளத்திற்கு செல்ல உள்ளது. இந்த அலுவலகத்திற்கு உள் நுழைவதற்கு முன் சுமார் 6 அடி அகலும், 8 அடி நீளமும் கொண்ட உள்வராண்டா உள்ளது. இதன் மேற்கு பக்கத்தில் சுமார் 10X10 நீள அகலம் கொண்ட துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களின் அறை சிறிய மரக்கதவுகளுடன் அமைந்துள்ளது, இந்த அறையில் சுமார் 5 அடி நீளமும், 3 ½ அடி அகலமும் ஒரு மர டேபிள் உள்ளது இதன் மேல் பகுதியில் DELL கணினி உள்ளது. மேலும் ஒரு மின்விசிறி மற்றும் இந்த அறையின் மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் 6 சிறிய மரக்கதவுகளுடன் ஜன்னல் அமைந்துள்ளது. மேற்படி துணை இயக்குனர் அறையின் வடக்கில் இரு மரக்கதவுகளளான வாசல் உள்ளது. இந்த தலைவாயிலின் வழியாக அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் 12'x25 நீள அகலம் கொண்ட அறை கிழக்கு மேற்காக அமைந்துள்ளது, இந்த அறையில் கிழக்கு

பகுதியில் சுமார் 4 அடி நீளமும், 3 அடி அகலமும் கொண்ட 3 மர டேபிள் உள்ளது, மற்றும் இரண்டு மின்விசிறிகள் மற்றும் ஒரு சிறிய மர பெஞ்ச் உள்ளது. இதன் தென் கிழக்கு பகுதியில் 8'x8 நீள அகலம் கொண்ட இளநிலை உதவியாளர் அறை உள்ளது இதில் ஒரு மின்விசிறியும், சுமார் 3 அடி நீளமும், 2 அடி அகலமும் கொண்ட ஒரு மர டேபிள் உள்ளது, இதன் மேல்பகுதியில் Wipro கணினியும், HP பிரிண்டர் ஒன்று உள்ளது. அந்த ஹாலின் வட கிழக்கு திசையில் 8'x6'அளவுள்ள பதிவறை உள்ளது. இந்த அறையின் வடக்கு பகுதியில் சிறிய 4 கதவுகள் கொண்ட ஜன்னல் உள்ளன மற்றும் இந்த ஹாலின் வடக்கு பகுதியில் 8'x8 நீள அகலம் கொண்ட ஒரு கழிப்பறை உள்ளது. 3. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு திருமதி ம.நஜ்மா, வயது 29/2020, க/பெ.மஹபூப்பாஷா, துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவண்ணாமலை திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. 4. இந்த திடீர் சோதனையின் போது 1) திருமதி ம.நஜ்மா, வயது 29/2020, க/பெ.மஹபூப்பாஷா, துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவண்ணாமலை 2) திரு.இ.பிரபு, (38/2020), த/பெ இளம்பருதி, உதவியாளர், 3) திரு.சு.சுந்தரமூர்த்தி (59/2020), த/பெ சுப்பிரமணி, இளநிலை உதவியாளர், 4) திரு. இரா.ஹரிஹரசுதன்ராஜ் (32/2020), த/பெ இராஜேந்திரன், இளநிலை உதவியாளர், 5) திரு. ச.சம்பத் (42/2020), த/பெ சத்தியமூர்த்தி அலுவலக உதவியாளர் மற்றும் தனியார் கம்பெனி பிரதிநிதிகள் சிலர் அலுவலகத்தினுள் இருந்தார்கள். 5. பின்னர் வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் என்னுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், அலுவலகத்தின் உள்ளே நுழைந்து சோதனை செய்ய பதிவறையில் கேட்பாரற்ற நிலையில் ரூபாய் 9,000/- இருந்தது. மேலும் அலுவலகத்தில் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோரவில்லை. எனவே அப்பணம் கைப்பற்றப்பட்டது.

பணியில் இருந்த அலுவலர்கள் மற்றும் அலுவலகத்தின் உள்ளே இருந்து கம்பெனி பிரதிநிதிகள் தங்களிடமிருந்த இருந்தபணத்தை ஆஜர் செய்தனர். பணத்திற்கு தக்கமுகாந்திரம் கூறியதால் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1. | திருமதி.ம.நஜ்மா, வயது 29/2020, க/பெ.மஹபூப்பாஷா, துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவண்ணாமலை | ரூ.350/- | ரூ.350/- |
| 2 | திரு.இ.பிரபு, (38/2020), த/பெ இளம்பருதி, உதவியாளர், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் திருவண்ணாமலை | ரூ.90/- | ரூ.90/- |
| 3 | திரு.சு.சுந்தரமூர்த்தி (59/2020), த/பெ சுப்பிரமணி, இளநிலை உதவியாளர், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் திருவண்ணாமலை | ரூ.270- | ரூ.270/- |
| 4 | திரு.இரா.ஹரிஹரசுதன்ராஜ் (32/2020), த/பெ இராஜேந்திரன், இளநிலை உதவியாளர், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் திருவண்ணாமலை | ரூ.319/- | ரூ.319/- |
| 5 | திரு. ச.சம்பத் (42/2020), த/பெ சத்தியமூர்த்தி, அலுவலக உதவியாளர், துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் திருவண்ணாமலை | ரூ.15/- | ரூ.15/- |

| | | | |
|---|---|---|---|
| 6 | திரு. சுந்தரமூர்த்தி, வயது (31/2020) த/பெ.சுப்ரமணி, நெ.2/3, ரோடு தெரு, அருணகிரிமங்கலம், தென்மகாதேவமங்கலம் போஸ்ட், கலசப்பாக்கம் தாலுக்கா. (தீபம் ஹோண்டா, திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை ஜெனரல் மேனேஜர்) (கைபேசி எண்.9597082815) | ரு.10/- | ரு.10-/- |
| 7 | திரு.மு.இராஜா, வயது 25/2020), த/பெ.முருகன், நெ.237, மாரியம்மன் கோயில்தெரு, கீழ்கரிப்பூர், திருவண்ணாமலை (ஸ்பேர் பார்ட்ஸ் ஆபிஸர், லான்சன் டொயோட்டா கம்பெனி, திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை ) (கைபேசி எண்.8870549652) | ரு.930/- | ரு.930/- |
| 8 | திரு.வே.இராஜசேகர், வயது 29/2020, த/பெ.வேணுகோபால், திம்மசமுத்திரம், காஞ்சிபுரம் மாவட்டம் (அசோசியட் ஆடிட்டர் ஹட்சன் அக்ரோ புராடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் காஞ்சிபுரம்) (கைபேசி எண்.9894437521) | ரு.1790/- | ரு.1790/- |
| 9 | திரு.ந.மோகன், வயது 39/2020, த/பெ.நடராஜன், நெ.32, எ, 3வதுதெரு, அண்ணாநகர், திருவண்ணாமலை. (மேலாளர் அருணாச்சலா மில்க் கம்பெனி, தண்டராம்பட்டு ரோடு, திருவண்ணாமலை) (கைபேசி எண்.9944744800) | ரு.5450/- | 5450/- |
| 10 | திரு.இரா.சத்யா, வயது 47/2020, த/பெ.இராமச்சந்திரன், நெ.150,உடையார்தெரு, பள்ளிப்பேட்டை, அச்சரப்பாக்கம்,செங்கல்பட்டு மாவட்டம். (புரடக்ஷன் மேனேஜர், கெமி டியூப்ஸ், பிரைவேட்லிமிடெட், தெள்ளார்) (கைபேசி எண்.9445393566) | ரு.8270/- | ரு.8270/- |

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு.தே.உதயகுமார், வயது 35/2020, த/பெ.தேவராஜன், நெ.147, சின்னவிநாயகர் கோயில்தெரு, இடையாத்தூர் கிராமம், திருக்கழுகுன்றம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். அலுவலக உதவியாளர் கெமி டியூப்ஸ், பிரைவேட்லிமிடெட், தெள்ளார்) (கைபேசி எண்.9445393562) | ரூ.140/- | ரூ.140/- |

மேலும் அங்கிருந்த ஹட்சன் அக்ரோ புரோடக்ட்ஸ் என்ற தனியார் நிறுவனத்தின் முதுநிலை அலுவலர் திரு.மு.கார்த்திகேயன், என்பவரை சோதனை செய்ய அவர் தன்னிடம் மேற்படி நிறுவனம் பெயர் அச்சிடப்பட்ட வெண்ணிற காகித கவரில் ஸ்டேபலர் போட்டு மூடப்பட்டிருந்தது அதுகுறித்து கேட்க அதில் ரூபாய் 25,000/- உள்ளதாகவும், அந்த பணம் திருவண்ணாமலை துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் திருவண்ணாமலை அவர்களிடம் கொடுக்குமாறு நிறுவனத்தின் அசோசியட் HR திரு.தணிகைவேல் கூறியதாக சொன்னார். மேலும் அவர் மேற்படி பணம் ரூபாய் 25,000/- போளூர் குளிரூட்டும் மையத்தில் அழுத்தக்கலன் கட்டணம் செலுத்துவதற்கு கொண்டு வந்ததாகவும் கூறினார். இது சம்மந்தமாக ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் துணை இயக்குனர் அவர்களிடம் விசாரிக்க அவர் போளூர் குளிரூட்டும் மையத்தின் சம்மந்தப்பட்ட கோப்பினை பார்வையிட்டு கடந்த 2018-ஆம் ஆண்டு முதல் 2020-ஆம் ஆண்டு தற்போது வரை நிலுவையில் உள்ள கட்டணத்தொகை ரூபாய் 38,800/- கட்டவேண்டியுள்ளது என கூறினார். மேலும் அழுத்தக்கலன் கட்டணத்தொகை கட்டவேண்டி போளூர் குளிரூட்டும் மையத்திற்கு வழங்கப்பட்ட அறிவிப்பு கடித நகலைப்பற்றி கேட்க துணை இயக்குனர் அவர்கள் அவ்வாறு அறிவிப்பு வழங்க தேவையில்லை என கூறினார். அதே நிறுவனத்தின் வந்தவாசி குளிரூட்டும் மையம் கட்டவேண்டிய அழுத்தக்கலன் நிலுவைத்தொகை பற்றி ஆய்வுக்குழு அலுவலர்

துணை இயக்குனர் அவர்களிடம் விசாரித்தார். துணை இயக்குனர் அவர்கள் வந்தவாசி குளிருட்டும் மையத்தின் கோப்பினை பார்வையிட்டு கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் 2020-ஆம் ஆண்டு தற்போது வரை செலுத்தவேண்டிய கட்டணத்தொகை ரூபாய் 1,49,600/- கட்டவேண்டியுள்ளது எனவும், அது சம்மந்தமாக துணை இயக்குனர் அலுவலகத்திலிருந்து வந்தவாசி குளிருட்டும் மையத்திற்கு நிலுவைகட்டணம் கட்டுவது தொடர்பாக அறிவிப்பு கடிதத்தின் அலுவலக நகலை காண்பித்தார். அந்த அறிவிப்பு கடிதத்தில் ரூபாய் 1,62,800/- கட்டவேண்டியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிவிப்பில் மேற்கண்ட தொகையினை கருவூலம் அல்லது வங்கியில் செலுத்தி அசல் சலானை வரைவோலையை துணை இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கமாறும் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட தகவலை திரு.கார்த்திகேயன் என்பவரிடம் கூறி மேற்படி ஸ்டேபலர் போடப்பட்ட கவரில் வைத்திருந்த பணம் ரூபாய் 25,000/- பற்றி கேட்க அவர் தக்க முகாந்திரம் எதுவும் கூறாததால் கைப்பற்றப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1. | திரு.மு.கார்த்திகேயன், வயது 32/2020, த/பெ.முருகானந்தம், நெ.200/A, பாலாஜிதெரு, கோனேரிகரை, காஞ்சிபுரம் மாவட்டம்.<br>(HR, ஹட்சன் அக்ரோ புராடெக்ட்ஸ், காஞ்சிபுரம்)<br>(கைபேசி எண்.7358398501) | ரூ.25,000/- | ரூ.25,000/- |

8. பின்னர் துணை இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருமதி.ம.நஜ்மா, அவர்களிடம் அலுவலகத்தின் வருகை பதிவேடு குறித்து கேட்க அதனை எடுத்து ஆஜர் செய்தார். அவ்வருகைப்பதிவேடானது 1 முதல் 52 பக்கங்களாக இருந்தது அதில் இன்றைய தேதிக்கான 23-வது பக்கத்தில் அவ் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கையொப்பம் இட்டு இருந்தனர். மேலும்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி மற்றும் போளூரில் உள்ள ஹட்சன் அக்ரோ புராடக்ட்ஸ் கம்பெனியின் கோப்புகள் TM 325 & TM 301 குறித்து ஆய்வுக்குழு அலுவலர் கேட்க துணை இயக்குனர் அவர்கள் அவ்விரு கோப்பையும் ஆஜர் செய்தார் அவ்விரு கோப்புகளும் முறையே 1முதல் 160 பக்கங்களாகவும், 1 முதல் 162 பக்கங்களாகவும் இருந்தது. மேற்படி ஆஜர் செய்த வருகைப்பதிவேடு மற்றும் இரண்டு கோப்புகளில் ஆய்வுக்குழு அலுவலர் திரு. து. கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குனர் திருமதி.நஜ்மா மற்றும் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை ஆகியோர் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது திருமதி.நஜ்மா, துணை இயக்குனர் அவர்களை திருமதி. கோ.மைதிலி காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை அவர்கள் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. 9. அலுவலகத்தில் கையூட்டு என்று கருதப்படும் சந்தேகத்திற்கிடமான ரொக்கம் ரூ.34,000/-யை இருதுறை கூட்டு திடீர்சோதனையில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. 10. இந்த திடீர் சோதனை இன்று 12.11.2020 இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் துணை இயக்குனர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (Sd XXXXX) திரு.து.கிருஷ்ணமூர்த்தி,ஆய்வுக்குழு அலுவலர்,வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,வேலூர். (Sd XXXXX) திருமதி.ம.நஜ்மா, துணை இயக்குனர்,தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவண்ணாமலை(Sd XXXXX) திருமதி.கோ.மைதிலி,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருவண்ணாமலை(Sd XXXXX) திரு.இரா. அருள்பிரசாத்,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை,

Sir.

Received the compalainant on 13.11.2020 at 1600 hrs and registered a case in Tiruvannamalai V&AC Cr.No.09/2020, u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 r/w 102 CrPC. on 13.11.2020 at 1630 hrs. The FIR in original along with the complaint, proceedings of Joint surprise Check, Dated: 12.11.2020 and Statements were sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the Copies to officers concerned. (Sd XXXXX) 13.11.2020 ( R.Arul Prasad, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

13/11/2020.
Inspector of Police
Vigilance and Anti Corruption
Tiruvannamalai Detachment.